


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 12.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- பொருளாதார நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்
- விருதுகள்




## தமிழக நிகழ்வுகள்

- தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் ஆகிய பகுதிகளுக்கான தேசிய மாணவர் படையின் (**National Cadet Corps – NCC**) இயக்குநரகம், ஜோத்பூரில் நடைபெற்ற **அகில இந்திய வாயு சேனைப் போட்டியில் சாம்பியன்ஸ்** கோப்பையை வென்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது
  - தொடர்ந்து 2 – வது முறையாக இந்த இயக்குநரகம் சாம்பியன்ஸ் பட்டம் வென்று சாதனைப் படைத்துள்ளது

## இந்திய நிகழ்வுகள்

- உலக வங்கியின் நிதி பங்களிப்புடன் **மத்திய அரசின் ஜல் மார்க் விகாஸ்** என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் **முதல் உள்நாட்டு நீர்நிலை கப்பல் போக்குவரத்து** திட்டத்தை இந்தியப் **பிரதமரால் நவம்பர் 12** அன்று தொடங்கப்பட்டுள்ளது
  - இந்திய நீர்வழி – 1 (**National Waterway – 1**) என பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் படி **ஹால்தியா – வாரணாசி இடையில் கங்கை ஆற்றில்** தொடங்க உள்ளது
- குறிப்பு:
  - இத்திட்டமானது அடுத்த கட்டமாக ஹல்தியா – சாஹிப்கஞ்ச் - வாரணாசி ஆகிய பகுதிகளால் 3 சரக்கு முனையங்கள் அமைக்கப்பட்டு விரிவுப்படுத்தப்பட உள்ளது

- **2019** ஆம் ஆண்டிலிருந்து **2022**-ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளுக்கு பன்னாட்டு தொலைதொடர்பு ஒன்றியத்தின் (**ITU – International Telecommunication Union**) உறுப்பினராக **இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது**.
  - 1952 ஆம் ஆண்டு முதல் பன்னாட்டு தொலைதொடர்பு ஒன்றிய ஆணையத்தில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இருந்து வருகிறது
- குறிப்பு:
  - சமீபத்தில் பன்னாட்டு தொலைதொடர்பு ஒன்றிய தெற்காசிய அலுவலகம் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்க மையம் ஆகியவற்றை புதுடெல்லியில் அமைக்க பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியம் முடிவு செய்துள்ளது

We Shine Academy™

## உலக நிகழ்வுகள்

- **சுற்றுச்சூழலுக்கு** தீங்கு விளைவிக்கக்கூடிய கூறுகளைக் கொண்ட சூரிய ஒளிக் கதிர்களிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்களுக்கு தடை விதித்த (**Sunscreen Products**) **உலகின் முதலாவது நாடாக** தென் பசுபிக் தீவில் உள்ள நாடான **பலாவு** உருவெடுத்துள்ளது

## விளையாட்டு நிகழ்வுகள்

- **AIBA (International Boxing Association)** பெண்கள் உலக சாம்பியன்ஷிப்பின் **10-வது** பதிப்பின் விளம்பர தூதராக ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற **எம்.சி. மேரி கோம்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்
  - புதுடெல்லியின் இந்திராகாந்தி அரங்கில் நடைபெறவிருக்கும் 2018 ஆம் ஆண்டிற்கான AIBA பெண்கள் உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு மேரி கோம் தலைமை தாங்குகிறார்

## பொருளாதார நிகழ்வுகள்

- **2019** – ஆம் ஆண்டில் இந்தியாவின் **பொருளாதார வளர்ச்சி 7.3** சதவீதமாக குறையும் என **மூடிஸ் இன்வெஸ்டர் சர்வீஸ் நிறுவனம்** மதிப்பீடு செய்துள்ளது. 2017 – 2028 ஆம் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.7 சதவீதமாக குறைந்துள்ளது
- குறிப்பு:
  - 2016 – 2017 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி 7.1 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **பூமிக்கு நிலவைப்** போன்று **மேலும் இரண்டு நிலவுகள்** இருப்பதை **ஹங்கேரியன் விண்வெளி விஞ்ஞானிகள்** கண்டுபிடித்துள்ளனர்.
  - முழுக்க முழுக்க துகள்களால் உருவானதான இந்த நிலவுகள், ஒழிந்திருக்கும் நிலவுகளாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது.
  - இந்நிலவுகளானது பூமியில் இருந்து சுமார் **2,50,000 மைல் தொலைவில் உள்ளன.**

## முக்கிய தினங்கள்

- **தேசிய கல்வி நாள் - நவம்பர் 11** (அபுல்கலாம் ஆசாத்தின் பிறந்த நாள்)
    - சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக விளங்கிய மௌலானா அபுல்கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 11 – ஆம் நாள் தேசிய கல்வி நாளாக கொண்டாடப்படுகிறது
- குறிப்பு:
    - மௌலானா அபுல்கலாம் ஆசாத் 1947 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் 1958-ம் ஆண்டு பிப்ரவரி – 2 வரை இவர் கல்வியமைச்சராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- பிரான்ஸின் தலைநகரான பாரிசில் இயங்கிவரும் **"எல்லைகளில்லாத பத்திரிக்கை நிருபர்கள்"** என்ற அமைப்பின் கீழ் வழங்கப்படும் பத்திரிக்கை சுதந்திரத்திற்காக **வீரதீரத்துடன் செயல்படும் நபர்களுக்கான விருதானது(2018)**, இந்திய பெண் பத்திரிக்கையாளரான **சுவாதி சதுர்வேதிக்கு** வழங்கப்பட்டுள்ளது
- குறிப்பு:
    - இவ்விருதானது **2018 – முதல் தான் வழங்கப்படுகிறது** என்பது குறிப்பிடத்தக்கது.